# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கரூர்

**முன்னிலை – திரு.எஸ்.பி.பரத் குமார், M.B.A.,L.L.M.,**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**
**2026 ம் வருடம், மார்ச் மாதம், 09 ம் நாள், திங்கள் கிழமை**
**குற்றவியல் பல்வகை மனு எண். 194/2026**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.1011/2025**

குருதேவா (27/25),

த/பெ. நவநீத கிருஷ்ணன் மனுதாரர் / எதிரி

/ எதிர் /

தமிழக அரசுக்காக,

காவல் உதவி ஆய்வாளர்,

கரூர் நகர காவல் நிலையம்,

(குற்ற எண். 634/2025) எதிர்மனுதாரர் / குற்றமுறையிடுபவர்

இம்மனுவானது 09.03.2026 இன்று என் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மனுதாரர் / எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கே.தினேஷ் குமார்,பி.ஏ.,எல்.எல்.பி., அவர்கள் ஆஜராகியும், பின்னிட்டு எதிர்மனுதாரர் / குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், மனு மற்றும் ஆவணங்களை பரிசீலித்தும் இருதரப்பையும் கேட்டறிந்து இம்மனுவில் இந்நீதிமன்றம் வழுங்கும்.

**<u>உத்தரவு</u>**

1. எதிரி மீது கரூர் நகர காவல் நிலைய குற்ற எண்.634/2025 பிரிவு 303(2) BNS ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரி பிணை கோரி பிரிவு 480 BNSS–ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. மனுதாரர் / எதிரி தரப்பில் தாக்கல் செய்த பிணை மனுவில் 303(2) BNS பிரிவு என்பது பிணையில் விடமுடியாத குற்றம் என்பதாலும், மனுதாரர் / எதிரி கடந்த 29.09.2025ம் தேதி கைது செய்யப்பட்டு இன்று வரை நீதிமன்ற காவலில் இருந்து வருவதாகவும், மனுதாரர் / எதிரி வேறு எந்த வழக்கிலும் ஈடுபடவில்லை எனவும், காவல்துறையினர் மனுதாரர் / எதிரி மீது தவறுதலாக வழக்கு பதிவு செய்துள்ளதாகவும், மனுதாரர் / எதிரி குற்றம் எதுவும் செய்யவில்லை என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், மனுதாரர் / எதிரி நிரந்தர முகவரியில் வசித்து வருபவர் என்றும், மனுதாரர் / எதிரி இவ்வழக்கு தொடர்பாக வேறு எந்த நீதிமன்றத்திலும் பிணை தாக்கல் செய்யவில்லை என்றும், மனுதாரர் / எதிரி உரிய பிணையதாரர்களை முன்னிருத்துவதாகவும், நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவதாகவும், மனுதாரர் / எதிரி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. அரசு மற்றும் காவல்துறை தரப்புக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டு பதில் அறிவிப்பு அரசு தரப்பில் தாக்கல் செய்யவில்லை.

4. மனுதாரர் / எதிரி தாக்கல் செய்துள்ள பிணை மனு மற்றும் வழக்காவணங்கள் ஆகியவற்றை கவனமாக பரிசீலனை செய்யப்பட்டதில், மனுதாரர் / எதிரி கடந்த 29.09.2025ம் தேதி கைது செய்யப்பட்டு 5 மாதங்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருவதாக தெரிய வருகிறது. ஆகவே மேலும் மனுதாரர் / எதிரியை நீதிமன்ற காவலில் வைக்க வேண்டிய அவசியமில்லை என்று இந்நீதிமன்றம் கருதுவதால் நீதியின் நலனை கருத்தில் கொண்டு, பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் மனுதாரர் / எதிரிக்கு பிணை வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்</u>**

1. மனுதாரர் / எதிரி தலா இரண்டு ஜாமீன்தாரர்களும் ரூ.10,000/−க்கு பிணைப்பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும். ஜாமீன்தாரர்கள் அடையாள சான்று

கொடுக்க வேண்டும். ஜாமீன்தாரர்களின் புகைப்படம், கட்டைவிரல் ரேகை மற்றும் செல்போன் எண் ஆகியவை பிணைப்பத்திரத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.

2. மனுதாரர் / எதிரி பிணையில் சென்ற தினத்திலிருந்து இந்நீதிமன்றத்தில் தினமும் காலை 10.00 மணிக்கு மறு உத்தரவு வரும்வரை கையெழுத்திட வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

3. நீதிமன்ற விசாரணையின்போது மனுதாரர் / எதிரி தவறாமல் ஆஜராக வேண்டும். தவறும் பட்சத்தில் 269 BNS ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்படும்.

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 09ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**